
**ஏப்ரல் – 01**

# TNPSC துளிகள்

- 2021 ஆம் ஆண்டிற்கான Asia Money அமைப்பின் சிறந்த வங்கி விருது வழங்கும் விழாவில் HDFC வங்கி சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இந்தியாவின் சிறந்த வங்கி என தேர்வு செய்யப் பட்டுள்ளது.
  - Asia Money விருதுகள் யாருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற முடிவினை மூத்தப் பத்திரிக்கையாளர்கள் கொண்ட ஒரு அணியால் மேற்கொள்ளப் பட்டது.
- அடுத்த மாதம் நடைபெற உள்ள ஐக்கிய அமெரிக்க நாடுகளால் ஏற்பாடு செய்யப் படும் காலநிலை பற்றிய காணொலி மாநாட்டில் கலந்து கொள்ள பிரதமர் நரேந்திர மோடி உட்பட உலகின் 40 தலைவர்களுக்கு அமெரிக்க அதிபர் ஜோ பிடன் அழைப்பு விடுத்து உள்ளார்.
  - இம்மாநாடு வலுவான காலநிலை சார் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் அவசியம் மற்றும் பொருளாதார நன்மைகளை குறிப்பிட்டுக் காட்டுவதற்கென்று நடத்தப் படுவதாகும்.

# தேசியச் செய்திகள்

## ஜல் ஜீவன் திட்டம் – புதிய மைல்கல் (சாதனை)




- 4 கோடி கிராமப்புற வீடுகளுக்கு குடிநீர்க் குழாய் வசதி ஏற்படுத்தி தந்து, ஜல்ஜீவன் திட்டம் ஒரு புதிய சாதனையைப் படைத்துள்ளது.
- இத்திட்டமானது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15, அன்று பிரதமர் மோடி அவர்களால் அறிவிக்கப் பட்டது.

- இத்திட்டத்தின் நோக்கம் 2024 ஆம் ஆண்டுக்குள் ஒவ்வொரு கிராமப்புற இல்லங்களுக்கும் குடிநீர்க் குழாய் வசதி வழங்க வேண்டும் என்பதாகும்.
- 100 சதவீத குடிநீர்க் குழாய் வசதியினை வழங்கிய முதல் இந்திய மாநிலம் கோவா ஆகும்.
- அதனையடுத்து தெலுங்கானா, அந்தமான் மற்றும் நிகோபர் தீவுகள் உள்ளன.

## ஊதாப் புரட்சி

- ஜம்முவிலுள்ள இந்திய ஒருங்கிணைந்த மருத்துவ நிறுவனம் (IIIM – Jammu) மற்றும் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபை இரண்டும் இணைந்து, நறுமண (அரோமா) திட்டத்தின் கீழ் ஊதாப் புரட்சியின் இரண்டாம் கட்டத்தை தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- ஜம்முவிலுள்ள தோடாவில் அடைந்த முதல் கட்டத்தின் வெற்றியை அடுத்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த ஊதாப் புரட்சியின் கீழ், தோடா மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் வருமானம், சோள உற்பத்தியிலிருந்து லாவெண்டர் சாகுபடிக்கு மாறியதன் மூலம் நான்கு மடங்கு அதிகரித்துள்ளது.
- முதல்முறையாக அதனைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இலவசமாக லாவெண்டர் செடிகள் வழங்கப் பட்டன.
- இதற்கு முன்பு லாவெண்டர் சாகுபடி செய்தவர்களுக்கு ஒரு செடிக்கு ரூ.5 முதல் ரூ.6 வரை வசூலிக்கப்பட்டது.
- விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய ஜம்மு IIIM நிறுவனத்திடமிருந்து உதவியினைப் பெறுவர்.
- விவசாயிகள் லாவெண்டர் எண்ணெய்யைப் பிரித்தெடுப்பதற்காக தோடாவில் CSIR நிறுவனம் – ஜம்மு IIIM நிறுவனம் ஆகியவற்றால் அமைக்கப்பட்டுள்ள நான்கு வடிகலன் தொழிற்சாலைக்குத் தாங்கள் சாகுபடி செய்த லாவெண்டர்களை கொண்டு செல்வதற்கான உதவியினைப் பெறுவர்.
- தற்போது, பெரிய அளவிலான லாவெண்டர் சாகுபடியானது ஜம்மு & காஷ்மீரில் மட்டுமே செய்யப் படுகிறது.
- இமாச்சலப் பிரதேசம், அருணாச்சலப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநில அரசுகள் லாவெண்டர் சாகுபடியை மேற்கொள்ளுமாறு விவசாயிகளை ஊக்குவித்து வருகின்றன.

### *ஊதா பொருளாதாரம்*

- லாவெண்டர் எண்ணெய் லிட்டருக்குக் குறைந்தது ரூ.10,000க்கு விற்பனை செய்யப் படுகிறது.
- லாவெண்டர் நீரானது லாவெண்டர் எண்ணெயிலிருந்துப் பிரித்தெடுக்கப்பட இயலும்.
- இது வாசனைப் பத்திகளை (குச்சிகளை) தயாரிக்கப் பயன்படுகிறது.
- வடிகலன்கள் மூலம் பூக்களிலிருந்து ஹைட்ரோசால் உருவாகிறது.
- இது சோப்புகள் மற்றும் அறையின் வாசனை ஆகியவற்றினை மேம்படுத்தும் பொருட்கள் (room freshners) ஆகியவை தயாரிக்கப் பயன்படுத்தப் படுகிறது.

### *குறிப்பு*

- 2016 ஆம் ஆண்டில், நறுமணமுடன் கூடிய மருத்துவக் குணமிக்க தாவர எண்ணெயினைத் தயாரிப்பதற்கு வேண்டி அத்தாவரங்களின் சாகுபடியை

அதிகரிப்பதற்காக அரோமா மிஷன் (நறுமணத் திட்டம்) எனும் திட்டத்தை மத்திய அரசு தொடங்கியது.




# சர்வதேசச் செய்திகள்

## உத்திசார் ஒத்துழைப்பு ஒப்பந்தம்

- ஈரான் மற்றும் சீனா ஆகிய நாடுகள் தங்களது இருதரப்பு உறவினை 'உத்திசார் கூட்டாண்மை நிலைக்கு' மேம்படுத்துவதற்காக 25 ஆண்டு ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த ஒப்பந்தம் தனியார் துறையில் ஒத்துழைப்பு மற்றும் சீனாவின் பட்டை மற்றும் சாலை என்ற திட்டத்தில் ஈரானின் பங்கு ஆகியவற்றை மேம்படுத்துவதில் ஈடுபாடு செலுத்தும்.
- ஈரான் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் பொருளாதாரத் தடைகளின் கீழ் தொடரும் சமயத்தில் இது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஈரானின் பொருளாதாரச் செயல்பாடுகளை வெகுவாக குறைத்து உள்ளது.
- இந்த ஒப்பந்தமானது சீனாவின் வாங்க் மற்றும் அவருக்கு இணையான பதவியினைக் கொண்ட ஈரானின் ஜவாத் சரீஃப் ஆகியோருக்கிடையே கையெழுத்தானது.

## பியூ ரிசர்ச் சென்டரின் ஒரு ஆய்வறிக்கை


- ஐக்கிய அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த (Pew Research Centre) பியூ ரிசர்ச் சென்டிரின் ஒரு ஆய்வறிக்கையின்படி, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த (அ) ஒரு நாளைக்கு 10 டாலர்கள் முதல் 20 டாலர்கள் வரை சம்பாதிக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை சுமார் 32 மில்லியனாக குறைந்துள்ளது.
- நடுத்தர வர்க்கத்தினரின் எண்ணிக்கை பெருந்தொற்றுக்கு முந்தைய கால மதிப்பீட்டு

அளவான 99 மில்லியனிலிருந்து தற்போது 66 மில்லியனாக குறைந்துள்ளது.

- ❖ ஒரு நாளைக்கு 2 டாலர்கள் அல்லது அதற்கு குறைவாக ஈட்டும் ஏழை மக்களின் எண்ணிக்கை தற்போது 75 மில்லியனாக உயர்ந்துள்ளதாக பியூ சென்டர் மதிப்பிட்டு உள்ளது.

**India is estimated to have seen a greater decrease in the middle class and a much sharper rise in poverty than China in the COVID-19 downturn**

*Estimated change in the number of people in each income tier due to the global recession in 2020, in millions*




Notes: The poor live on $2 or less daily, low income on $2.01-$10, middle income on $10.01-$20, upper-middle income on $20.01-$50, and high income on more than $50; figures expressed in 2011 purchasing power parities in 2011 prices. The estimates show the difference in the number of people in an income tier based on pre-pandemic projections and post-pandemic estimates. The term "post-pandemic" refers to the period since the onset of the pandemic in January 2020. It is assumed there is no change in the income distribution from the benchmark year for the projection to 2020.
Source: Pew Research Center analysis of the World Bank's PovcalNet database.

PEW RESEARCH CENTER

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கடலடி கம்பிவடங்கள்

- ❖ சிங்கப்பூர், இந்தோனேசியா மற்றும் வட அமெரிக்கா ஆகிய நாடுகளை இணைப்பதற்காக இரண்டு புதிய கடலடி கம்பிவடங்களை (Undersea cables) அமைப்பதற்கு பேஸ்புக் (முக நூல்) நிறுவனம் திட்டமிட்டுள்ளது.
- ❖ இத்திட்டமானது கூகுள் மற்றும் பிராந்தியத் தகவல் தொடர்பு நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து மேற்கொள்ளப் படுகிறது.
- ❖ இத்திட்டம் இந்தப் பகுதிகளுக்கிடையேயான இணையதள வசதியை மேம்படுத்தச் செய்வதற்கான ஒரு திட்டமாகும்.
- ❖ Echo மற்றும் Bifrost எனப் பெயரிடப்பட்ட இந்தக் கம்பிவடங்கள் ஜாவா கடலைக் கடக்கும் ஒரு பலதரப்பட்ட பாதையினூடே செல்லும் முதல் இரண்டு கம்பிவடங்கள் ஆகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## திமிங்கல சுறா மீன்

- ஒடிசா கடற்கரையில் திமிங்கல சுறா மீன் ஒன்று மீனவர்களால் மீட்டு எடுக்கப் பட்டு உள்ளது.
- ஆமைகள், திமிங்கலங்கள் மற்றும் சுறாக்கள் போன்ற பெரிய கடல்சார் விலங்குகளுக்கு இது ஒரு முக்கியமான உயிரினமாகும்.
- உடலில் புள்ளிகளுடன் கூடிய திமிங்கல சுறாவானது பெருங்கடலிலுள்ள மிகப்பெரிய மீனாகும்.
- இது மீனவ மொழியில் "Gentle Giant" என அழைக்கப் படுகிறது.
- இது ஒரு "Filters Feeder" சுறாவாகும்.
- அதாவது மற்ற சுறாமீன்களைப் போல இது மாமிசம் உண்ணாது என இதற்குப் பொருளாகும்.
- இது கடல்நீரை வடிகட்டி சிறிய அளவிலான மிதவை உயிரிகளை உட்கொள்ளும்.
- இந்தியாவில் மிகப்பெரிய அளவிலான திமிங்கல சுறாக் கூட்டங்கள் குஜராத் கடல் பகுதிகளில் காணப்படுகின்றன.
- வங்காள விரிகுடாப் பகுதியில் ஆந்திரப் பிரதேச கடற்பகுதிகளில் மட்டுமே காணப் படுகின்றன.
- திமிங்கல சுறாக்கள் உலகின் அனைத்து வெப்பமண்டலப் பெருங்கடல் பகுதிகளிலும் காணப் படுகின்றன.

## சீறத் தொடங்கிய மவுண்ட் மெராபி எரிமலை

- இந்தோனேஷியாவின் அடிக்கடி கொந்தளிக்கக் கூடிய மவுண்ட் மெராபி எரிமலை, மீண்டும் வெடித்துள்ளது.
- இது காற்றில் அதிக உயரத்திற்கு சாம்பல்களைத் தெறித்து எறிந்தது.
- இது அதன் மலைச் சரிவுகளில் நெருப்புக் குழம்பு மற்றும் குப்பைகளை வெளியிட்டு வருகிறது.
- 2,968 மீட்டர் உயரமுடைய இந்த எரிமலை பண்டைய நகரமான யோக்யகர்தாவிற்கு அருகேயுள்ள அதிக நெருக்கமான மக்கள்தொகையைக் கொண்ட ஜாவா தீவில் அமைந்து உள்ளது.
- இது இந்தோனேசியாவின் அடிக்கடி சீறும் பன்னிரெண்டு எரிமலைகளுள் ஒன்றாகும்.
- மேலும் சமீபத்தில் இது அடிக்கடி சீறியுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## சிக்மோ திருவிழா

- இந்த ஆண்டு வசந்தகால திருவிழாவின் அணிவகுப்புகள் நடைபெறாது என கோவா அரசு அறிவித்துள்ளது.
- இதற்கான முக்கியக் காரணம் திடீரென கோவிட் – 19 தொற்றுப் பாதிப்புகள் உயர்ந்துள்ளதே ஆகும்.
- சிக்மோ கோவா மாநிலத்தில் நடைபெறும் மிகப்பெரிய வசந்தகால திருவிழாவாகும்.

- இது ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் நடைபெற இருந்தது.
- சிக்மோ திருவிழா என்பது கோவாவில் பழங்குடியினர் சமுதாயத்தால் கொண்டாடப் படுகிற ஒரு வளமான மற்றும் பொன் நெல் அறுவடையினைக் கொண்டாடும் ஒரு திருவிழாவாகும்.
- வசந்த காலம் தொடங்குவதைக் குறிக்கும் இந்த திருவிழாவானது குன்பீஸ், கௌடாஸ் மற்றும் வெளிப்ஸ் போன்ற விவசாய சமுதாயத்தினரால் கொண்டாடப்படுகிறது.
- கோடேமோதினி, கோபா மற்றும் புகாதி போன்றவை இவ்விழாவில் பங்கேற்பவர்கள் மேற்கொள்ளும் நாட்டுப்புற நடனங்கள் ஆகும்.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## அனில் தார்கெர்

- புகழ்பெற்ற ஒரு பத்திரிக்கையாளரும் பதிப்பாசிரியருமான அனில் தார்கெர் சமீபத்தில் காலமானார்.
- மும்பை சர்வதேச இலக்கியத் திருவிழாவை நிறுவியரும் அதன் இயக்குநரும் இவரே ஆவார்.
- "Debonair', 'Mid-day', 'The independent' மற்றும் 'The Illustrated weekly of India' போன்ற பல இந்திய இதழ்களின் பதிப்பாசிரியராக தார்கெர் பணியாற்றியுள்ளார்.
- இவர் மகாத்மா காந்தியின் தண்டி யாத்திரை பற்றிய "The Romance of Salt" எனும் ஒரு புத்தகத்தையும் எழுதியுள்ளார்.

## சர்வதேச வனப் பாதுகாவலர் விருது

- இராஜாஜி புலிகள் காப்பகத்தின் வனப் பாதுகாவலர் மகிந்தர் கிரி மதிப்புமிக்க சர்வதேச வனப் பாதுகாவலர் விருதினை வென்றுள்ளார்.
- ஆசியாவிலேயே இந்த விருதைப் பெறும் ஒரே வனப் பாதுகாவலர் இவரே ஆவார்.
- வனப் பாதுகாப்பிற்காக இவர் ஆற்றிய தொண்டிற்காக வேண்டி இந்த விருது வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- இவ்விருது சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் (IUCN) மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கான உலக ஆணையம் (WCPA) ஆகியவற்றால் அறிவிக்கப்பட்டுள்ளது.

- இவ்விருது IUCN + WCPA, சர்வதேச வனப் பாதுகாவலர் கூட்டமைப்பு, உலகளாவிய வனவிலங்குப் பாதுகாப்பு அமைப்பு மற்றும் வனப் பாதுகாப்பு நட்பு நாடுகள் ஆகியவற்றால் ஒன்றிணைந்து உருவாக்கப்பட்டது.
- இந்த விருது 2020 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- இந்த விருது உலகெங்கிலும் உள்ள பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் பணி புரியும் வனப் பாதுகாவலர்கள் மேற்கொள்ளும் அசாதாரணப் பணிகளை முன்னிலைப்படுத்தி அவற்றைப் பாராட்டும் நோக்கில் வழங்கப்படுகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★